1975 நவம்பர் 11]

இரும்பொறை—பெரிய கொமாரபாளையம் சாலை

* 297 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, இரும்பொறையிலிருந்து பெரியகொமாரபாளையம் செல்லும் பாதையினை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சீத்தக்காட்டனூரில் கிணறுகள் வெட்டுதல்

*298 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், முத்துரெங்கம்பட்டி பஞ்சாயத்திலுள்ள, சீத்தக்காட்டனூர் பொதுமக்களுக்கு குடிநீர் கிணறு வெட்ட டெண்டர் டிபாசிட் தொகை ஏதேனும் ஒப்பந்தக்காரரால் கட்டப்பட்டதா?

(இ) ஆம் எனில், மேற்படி கிணறு வெட்டப்படாமல் இருப்பதற்கு உரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) மேற்படி பணிக்குக் கிடைக்கப் பெற்ற ஒப்பந்தப் புள்ளி ஒரே ஒப்பந்தப் புள்ளியாக இருந்தமையால், ஒப்பந்தப் புள்ளிக்கு உதவிப் பொறியாளர் ஒப்புறுதி அளிக்கவில்லை. இவ்வாண்டிலோ அல்லது அடுத்துவரும் நிதி ஆண்டிலோ இப்பணியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சீத்தக்காட்டனூரில் உள்ள கிராமப் பொதுமக்கள் குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லாமல் மிகவும்